மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்
පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව, උතුරු පළාත්
PROVINCIAL DEPARTMENT OF EDUCATION, NORTHERN PROVINCE

# தமிழ்மொழியும் இலக்கியமும்
## சுயகற்றல் கையேடு
## தரம் - 06

கையேடு தயாரிப்பு : வலயக் கல்வி அலுவலம், வலிகாமம்.

## அலகு 7
## (அழ.வள்ளியப்பாவின் பாடல்கள்)
## மொழித்திறப் பாடல்

1. **பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.**

    1. …………………….. வாங்கிடவே சந்தைக்குப் போனேன்.
    2. வேலுச்சாமி கடையினிலே …………………………. பார்த்தேன்.
    3. குலையுடன் மாம்பழம் …………………. கிடைத்தது.
    4. கொடியவனுக்கு கிடைத்தது …………………………..
    5. விடாது பெய்த மழையினிலே …………………………பார்த்தேன்.
    6. தாய்த்திரு நாட்டைக் காத்திடவே……………………….போனேன்.

    (வெள்ளத்தை, கொல்லையில், தண்டனை, வெல்லத்தை, சாம்பல் பூசணி, சண்டைக்கு)

2. **தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 1. சண்டை | 1. சீனி |
| 2. நாடு | 2. குடம் |
| 3. வெல்லம் | 3. போர் |
| 4. தவளை | 4. கெட்டவன் |
| 5. வெள்ளம் | 5. தேசம் |
| 6. கொடியவன் | 6. நீர்ப்பெருக்கு |

3. சந்தைக்குப் போனேன்….என்ற பாடலைப் பாடியவர் யார்?
    அழ.வள்ளியப்பா
4. அழ.வள்ளியப்பாவின் முழுப் பெயர் என்ன?
    அழகப்பச் செட்டியார் வள்ளியப்பா.
5. வள்ளியப்பாவின் சொந்த இடம் யாது?
    புதுக்கோட்டை மாவட்டம்.
6. அழ.வள்ளியப்பாவிற்கு கிடைத்த பட்டங்கள் எவை?
    குழந்தை இலக்கியச் செம்மல், தமிழ்ப் பேரவைச் செம்மல்.

7. **பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்குக.**

மழை: நேற்று மழை பெய்தது.

மலை: மலை மிகவும் உயரமானது.

வெல்லம்:………………………………………………………………

வெள்ளம்:……………………………………………………………....

வேலை:…………………………………………………………………

வேளை:…………………………………………………………………

## அணிற் பாடல்

1. அழகு மிக்க பிள்ளை என அழைப்பது எதை?
   அணிற் குஞ்சை
2. அழகு என்பதைக் குறிக்கும் வேறு சொற்கள் இரண்டு தருக.
   வனப்பு, வடிவு
3. அணிலின் முதுகில் உள்ள கோடுகள் எத்தனை?
   மூன்று
4. அந்தக் கோடுகள் யார் தந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது?
   இராமன்
5. அணிற் பிள்ளையின் செயற்பாடுகளைக் குறிப்பிமுக.
   அங்கும் இங்கும் ஓடுதல்
   பழங்களைப் பிடித்துக் கொறித்தல்
   வாலைத் தூக்குதல்
   மரத்தின் உச்சி ஏறுதல்
   கிளைகள் தோறும் தாவுதல்
6. படைத்தல் கடவுளாக கூறப்படுபவர் யார்?
   பிரம்மன் (நான்முகன்)
7. அணில் எவ்வாறு கத்தும்?
   கீச்சுக் கீச்சு
8. அணிலின்இளமைப் பெயர்கள் யாவை?
   குஞ்சு, பிள்ளை
9. இப்பாடலில் அணிலிடம் வேண்டப் படுவது யாது?
   கிள்ளிக் கிள்ளிப் பழங்களை கீழே எனக்குப் போடுவாய் என வேண்டப் படுகிறது.
10. இப் பாடலில் அணில் யாது செய்யாது எனக் கூறப்படுகின்றது?
    கெடுதி ஏதும்

## இளமைப் பெயர்கள்

### 1. விலங்குகளின் இளமைப் பெயர்கள்

1. அணில் - குஞ்சு, பிள்ளை
2. ஆடு – குட்டி
3. கீரி – பிள்ளை
4. யானை – குட்டி, போதகம்
5. பூனை – குட்டி
6. குரங்கு – குட்டி, பறள்
7. புலி – குட்டி
8. சிங்கம் - குருளை, குட்டி
9. நரி – பறள்
10. குதிரை – குட்டி

### 2. தாவரங்களின் இளமைப் பெயர்கள்

1. மா – கன்று
2. கமுகு – கன்று, பிள்ளை
3. பனை – வடலி
4. வேம்பு – கன்று
5. வாழை – குட்டி, கன்று
6. பலா – கன்று
7. புகையிலை – நாற்று
8. தென்னை – கன்று, பிள்ளை
9. நெல் - நாற்று
10. தக்காளி – கன்று

### 3. தொனியைக் குறிக்கும் சொற்கள்

1. அணில் - கீச்சிடும்
2. ஆந்தை – அலறும்
3. நரி – ஊளையிடும்
4. குதிரை – கனைக்கும்
5. சிங்கம் - கர்ச்சிக்கும்
6. மயில் - அகவும்
7. வண்டு - இரையும்
8. எருமை – எக்காளமிடும்
9. தேவாங்கு – அழும்
10. குரங்கு – அலம்பு

# அலகு 8
# மூடாமை

## 1. ஒத்தகருத்துச் சொற்கள்

| | |
|---|---|
| 1. குளம் - பொய்கை, தடாகம் | 6.உயிர் - ஆன்மா |
| 2. அழகு – எழில், வனப்பு | 7.நட்பு – கேண்மை |
| 3. நன்மை – நலம், சுபகாரியம் | 8.தொலைவு – தூரம் |
| 4. அண்டை – அயல் | 9.தரை – நிலம், பூமி |
| 5. மூத்தோர் - முதியவர் | 10.துன்பம் - வருத்தம் |

2. மூடாமை என்ற கதைப் பாடலின் ஆசிரியர் யார்?
   பெருஞ்சித்தினார்
3. பெருஞ்சித்தினாரின் இயற் பெயர் யாது?
   மாணிக்கம்
4. அப் பாடல் எத்தொகுப்பில் இடம்பெறுகின்றது.?
   ''பள்ளிப் பறவைகள'' தொகுப்பில்
5. குளத்தில் வாழ்ந்த உயிரினங்கள் எவை?
   ஓர் ஆமை, இரண்டு கொக்குகள்
6. ஆமையும் கொக்குகளும் ஏன் வருந்தின?
   குளத்தில் நீர் வற்றியமையால்
7. ஆமை அழுதமைக்கான காரணத்தைக் கூறுக.
   அயல் ஊரில் உள்ள குளத்தை நாடி இரண்டு கொக்குகளும் செல்வதற்கு எண்ணியமையை அறிந்து ஆமை அழுதது.
8. ஆமை கொக்குகளிடம் கூறிய விழுமியக் கருத்து யாது?
   ஒருவர் நலமுடன் இருக்கும் போது நட்புடன் வாழ்வதும் பின்னர் அவருக்கு ஒரு துன்பம்
   ஏற்படும் போது அவரை விட்டு விலகுவதும் நல்லதல்ல.
9. கொக்குகள் ஆமையை எவ்வாறு அழைத்துச்செல்ல முனைந்தன?
   கொக்குகள் தாம் வாயில் வைத்திருக்கும் குச்சிகளை ஆமை பற்றிப் பிடித்திருக்க கொக்குகள் ஆமையை தூக்கிக் கொண்டு பறந்து செல்வது என முடிவெடுத்தன.
10. கொக்குகள் ஆமையைது தூக்கிக் கொண்டு செல்வதைப் பார்த்து ஊரவரும் சிறுவரும் யாது செய்தனர்?
   ஊரவர்கள் நின்று பார்த்தனர்
   சிறுவர்கள் கை கொட்டிச் சிரித்துக் கூச்சல் போட்டனர்.
11. ஆமை எதற்காக வாயைத் திறந்தது?
   ''கீழே இரைச்சல் ஏன்?'' என்று கேட்பதற்காகவாயைத் திறந்தது.
12. முடிவில் ஆமைக்கு என்ன நடந்தது?
   கீழே நிலத்தில் விழுந்து நொறுங்கிப் போனது.
13. இக் கதைப் பாடல் மூலம் உணர்த்தப்படும் படிப்பினைகள் எவை?
   1.ஒருவருக்கு துன்பம் ஏற்படும் போது அவரை விட்டு விலகக் கூடாது.
   2.மூத்தோர் சொல் கேட்டு நடக்க வேண்டும்.
   3.கடமை, அடக்கம் என்பவற்றைக் காத்துக் கொள்ள வேண்டும்.

## 14. தொடர்பு படுத்துக.

| | |
|---|---|
| 1. குளம் | 1. நிலம் |
| 2. நன்மை | 2. ஆன்மா |
| 3. தரை | 3. பொய்கை |
| 4. மூத்தோர் | 4. நலம் |
| 5. துன்பம் | 5. முதியவர் |
| 6. உயிர் | 6. வருத்தம் |

## சொல்

ஓரெழுத்தால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்களால் அமைந்து பொருள் தருவது சொல் ஆகும்
சொற்களை இலக்கண அடிப்படையில் பெயர், வினை, இடை, உரி என நான்கு வகைப்படுத்துவர்.

## பெயர்ச் சொல்

ஒரு பொருளின் பெயரைக்குறிக்கும் சொல் பெயர்ச் சொல் எனப்படும்
பெயர்ச் சொல் ஆறு வகைப்படும்.

1. **பொருட் பெயர்**: ஏதாவது ஒரு பொருளின், உயிரினங்களின் பெயரைக் குறிக்கும் சொல்.
   உதாரணம்: கதிரை, மாலா, புத்தகம்
2. **இடப்பெயர்**: இடங்களின் பெயரைக் குறிக்கும் சொல்.
   உதாரணம்: யாழ்ப்பாணம், வீடு, பாடசாலை.
3. **காலப் பெயர்**: ஒரு காலத்தின் பெயரைக் குறிக்கும் சொல்.
   உதாரணம்: நேற்று, கார்த்திகை, கோடை
4. **சினைப் பெயர்**: ஒருபொருளின் பகுதியை அல்லது உறுப்புக்களைக் குறிக்கும் சொல்
   உதாரணம்: கண், இறகு, கிளை
5. **குணப் பெயர்**: நிறம், சுவை, வடிவம், உணர்ச்சி போன்றவற்றின்பண்புகளைக் குறிப்பது.
   உதாரணம்: பச்சை, இனிப்பு, வட்டம், அழுகை
6. **தொழிற் பெயர்:** ஒரு தொழிலின் செயலைக் குறிப்பது.
   உதாரணம்: ஆடல், பாடல்

## வினைச் சொல்

ஒரு செயலை உணர்த்தும் சொல் வினைச் சொல் எனப்படும்.
**உதாரணம்:** ஓடினான், பாடினேன், படிப்பான், எழுதுகின்றேன்.

### பின்வரும் சொற்களைப் பெயர்ச் சொல், வினைச் சொல் என வகைப் படுத்துக.

(குளம், வருத்தின, கண்ணன், கால்கள், பார்த்தனர், என்றன, தம்பி, சொல்லுவோம், சிறுவர், திறந்தது)

| பெயர்ச் சொல் | வினைச் சொல் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

### பின்வரும் சொற்களைக் கொண்டு அட்டவணையைப் பூர்த்தி செய்க.

(குளிர், கோபம், வவுனியா, இலை, வானம், கமலன், சதுரம், சிங்கம், நாளை, மூக்கு, துள்ளுதல், சித்திரை, மாடு, புளிப்பு, இலங்கை, கொம்பு, வருதல், கோயில், காலை, கதிரை, படித்தல், ஓடுதல்)

| பொருட் பெயர் | இடப் பெயர் | காலப் பெயர் | சினைப் பெயர் | குணப் பெயர் | தொழிற் பெயர் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

**இரட்டைக்கிளவி:** தனித்து நின்று பொருள் தராமல் ஒரு சொல் அடுத்தடுத்து இரண்டு முறைவருமானால் அது இரட்டைக் கிளவி எனப்படும்

1. கடகட 2. மடமட 3. கமகம 4. கலகல
5. சிடுசிடு 6. குடுகுடு 7. கலீர்கலீர் 8. பளபள
9. கிறுகிறு 10. வளவள

**இணைமொழிகள்:** இச்சொற்கள் எதிர்ப் பதமாகவும் ஒத்த பதமாகவும் இணைந்து கருத்தை வெளிப்படுத்தும்

1. ஆதிஅந்தம் 2. ஆறஅமர 3. விருப்புவெறுப்பு 4. சீரும்சிறப்பும்
5. பழக்கவழக்கம் 6. எலும்பும்தோலும் 7. கள்ளங்கபடம் 8. குன்றும் குழியும்
9. மேடுபள்ளம் 10. உயர்வுதாழ்வு

**அடுக்குத்தொடர்:** தனித்து நின்று பொருள் தரக்கூடிய ஒருசொல் அடுத்தடுத்து இரண்டுமுறை வருவது அடுக்குத்தொடர் எனப்படும்.

1. அடுத்தடுத்து 2. விடியவிடிய 3. பாம்புபாம்பு 4. மேலேமேலே
5. விழுந்துவிழுந்து 6. உயரஉயர 7. துள்ளித்துள்ளி 8. ஓடிஓடி
9. கீழேகீழே 10. சின்னச்சின்ன

## பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.

(இன்பதுன்பம், மடமட, குடுகுடு, அல்லும்பகலும், உயரஉயர)

1. பாட்டி………………… என நடந்து சென்றாள்.
2. பறவை…………………..பறந்து சென்றது
3. தம்பி தண்ணீரை…………………..எனக் குடித்தான்
4. மனிதனது வாழ்வில் ……………………..மாறி மாறி வரும்
5. அப்பா …………………………… அயராது உழைத்தார்

## பின்வரும் இணை மொழிகளைப் பூர்த்தி செய்க.

1. பாலும்…………………
2. கள்ளம்…………………
3. கொடுக்கல்………………
4. மூலை…………………..
5. பூவும்……………………
6. ஏறக்…………………….
7. ஓட்டமும்………………..
8. வரவும்………………….
9. நன்மையும்………………
10. காலையும்………………

**மூவிடப்பெயர்:** இடப்பெயர்கள் மூன்று வகைப்படும்

**தன்மை:** பேசுவோனைக் குறிக்கும்
உதாரணம்: நான், யான் - தன்மை ஒருமை
நாம், நாங்கள் - தன்மைப் பன்மை

**முன்னிலை:** கேட்பவனைக்குறிக்கும்
உதாரணம் நீ – முன்னிலை ஒருமை
நீங்கள், நீர் - முன்னிலைப் பன்மை

**படர்க்கைப் பெயர்:** பேசப்படும் பொருளைக் குறிக்கும்
உதாரணம்: அவன், அவள், அது – படர்க்கை ஒருமை
அவர்கள், அவைகள் - படர்க்கைப் பன்மை

## பொருத்தமான விடை எழுதுக.

1. தன்மை ஒருமை ஒன்று தருக. ……………………
2. தன்மைப் பன்மை ஒன்று தருக……………………
3. முன்னிலை ஒருமை ஒன்று தருக. ……………………
4. முன்னிலைப் பன்மை ஒன்று தருக……………………
5. படர்க்கை ஒருமை ஒன்று தருக. ……………………
6. படர்க்கைப் பன்மை ஒன்று தருக……………………

## அலகு 9
## தென்னைமரக் கும்மி

1.கும்மி எவ்வகை இலக்கியம்?
நாட்டார் இலக்கியம் (கிராமியக் கலை வடிவம்)
2. கும்மி பெரும்பாலும் யாரால் நிகழ்த்தப்படம்?
பெண்களால்
3. கும்மி எவ்வாறு ஆடப்படும்?
பெண்கள் வட்ட வடிவமாகக் கூடிநின்று கைகொட்டி ஆடுவது.
4. தென்னை மரத்தின் பயன்கள் எவை?
1.வாத்தியார்க்கும் பிள்ளைக்கும் நிழல் தரும்
2.உணவு சமைப்பதற்கு அடுப்பிற்கு உதவிடும்
3.ஏற்றம் இறைப்பதற்குக் கயிறாக உதவிடும்
5. எங்கெங்கு பந்தல் இடப்படுவதாகக் கூறப்படுகின்றது?
கோவில் வாசல், கலியாண வீட்டு வாசல், சீமந்த வாசல்.
6.தென்னை மரத்தின் பகுதிகளைப் பெயரிடுக.
தென்னைமட்டை, ஓலை, குருத்தோலை, பாளை, இளநீர், தேங்காய்.
7.தென்னோலை பயன்படுத்தப்டும் பல்வேறு சந்தர்ப்பங்ளைக் குறிப்பிடுக.
‘பூக்கூடை செய்ய, பந்தல் வேய, மாளிகைக்கு மறைப்புக்கு, நிழல்தர, விளக்குமாறு செய்ய, மழைநாளில் சம்மங் குடையாக, பாயாக, பெண்களுக்கு அடுப்புப் பற்ற வைக்க.
8. தேங்காய் பயன்படுத்தப்படும் பல்வேறு சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.
சமையலுக்கு உதவும், ஆலங்களில் பூசைக்கு உதவும், எண்ணெய் பெற, தேங்காய்ப் பாலாக, சிரட்டையாக, சமைப்பதற்கு அகப்பையாக.
9. தென்னை மரக் கும்மி பாடுவோருக்குக் கிடைக்கும் பயன் எது?
ஆல்போல் தழைத்து ஆறுகுபோல் வேரோடி
மூங்கில் போல் சுற்றம் முசியாமல் வாழ்ந்திருப்பார்
10. தென்னமரக் கும்மி எத்தொகுதியில் இருந்து எடுக்கப் பட்டது?
ஸ்ரீசிவசுப்பிர மணியர் வள்ளியைச் சிறையெடுத்த கொப்பிப் பாட்டுத் தொகுதியில் இருந்து எடுக்கப்பட்டது

### 11. பின்வரும் அரும்பதங்களின் பொருளைத் தருக.

1. அடிசில்…………..
2. மாந்தர்………………..
3. கொட்டாங்கச்சி…………………….
4. முசியாமல்…………….
5. குவலயம்……………………

**12. பின்வரும் பகுதியில் காணப்படும் எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக.**

தென்னை மரம் வானுற ஓங்கி வழரும் ஒரு வான் பயிராகும். தேன்னையிலிருந்து தோங்காய், தென்னோழை, சிறட்டை, பாளை, இழணீர், குறுத்தோலை, முதலியவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

**13. பின்வரும் சொற்களை வைத்து பொருத்தமான வாக்கியம் அமைக்குக.**

1. கும்மி………………………………………………………………………
2. தாளம்……………………………………………………………………..
3. அடிசில்…………………………………………………………………
4. பந்தல்……………………………………………………………………….
5. பிரார்த்தனை……………………………………………………………

## அலகு10
## புதிய ஆத்திசூடி

1.ஆத்திசூடி பாடிய புலவர் யார்?

ஔவையார்

2.ஆத்திசூடி எனப் பெயர் வரக் காரணம் என்ன?

ஆத்தி மாலையணிந்தவர் சிவபெருமான் எனவே சிவனைப் போற்றப் பாடப்பட்டது என ஒருசாராரும், ஆத்தி மாலையணிந்தவர்கள் சோழமன்னர்கள் என்பாதல் சோழமன்னரைக் குறிப்பிடுவதற்கென ஆத்திசூடி என பெயர் வந்தது எனவும் குறிப்பிடுவர்.

3.புதிய ஆத்திசூடியைப் பாடிய புலவர் யார்?

பாரதியார்

4.பாரதியாருக்குப் பின்னர் ஆத்திசூடி பாடிய புலவர் யார்? இவர் எத்தனை ஆத்திசூடிகளைப் படினார்?

பாரதிதாசன், இரண்டு

5.பரம்பொருள் வாழ்த்துப் பகுதியில் இடம்பெறும் கடவுளர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

சிவபெருமான், திருமால், அல்லா, ஜேசுவின் தந்தை

6.ஆத்திசூடி அடிகளை மனனம் செய்க.

**பின்வரும் ஆத்திசூடி அடிகளுக்குப் பொருள் எழுதுக.**

அ. இளைத்தல் இகழ்ச்சி:

ஆ. உடலினை உறுதிசெய்:

இ. எண்ணுவ துயர்வு:

ஈ. கற்ற தொழுகு:

உ. கூடித் தொழில் செய்:

ஊ. கல்வியதை விடேல்:

எ. தேசத்தை காத்தல் செய்:

**7. பின்வரும் சொற்களின் பொருளினை எழுதுக.**

| | |
|---|---|
| அ. ஞெயம் - | ஊ. கேடு – |
| ஆ. ஞெகிழ்வது – | எ. குன்று – |
| இ. ஞிமிறு – | ஏ. ஊண் - |
| ஈ. ஞமலி – | ஒ. ஈகை – |
| உ. சரித்திரம் - | ஓ. ஔடதம் - |

**8. “துன்பம் மறந்திடு” என்ற தலைப்பில் ஐந்து வாக்கியம் எழுதுக.**

1.
2.
3.
4.
5.

**9. இணைக்குக.**

| | |
|---|---|
| 1. அச்சம் தவிர் | உணவுவகைகளை அதிதமாக விரும்பு |
| 2. கைத்தொழில் போற்று | எருது போல தன்னம்பிக்கையோடு நடக்கவும் |
| 3. சாவதற்கு அஞ்சேல் | வீரச் செயல்களைச் செய்பவர்களை மதித்துப் புகழ் |
| 4. ஏறுபோல் நட | செயல்களை ஆராய்ந்து துணிவுடன் மேற்கொள் |
| 5. சூரரைப் போற்று | இறப்பதற்கு அச்சப் படாதே |
| 6. செய்வது துணிந்து செய் | கெடுத்து அழிப்பது சோம்பல் |
| 7. சௌரியம் தவறேல் | சிறு தொழில்களை விரும்பிச் செய் |
| 8. ஊண் மிக வரும்பு | கதிரவன் நலம் கருதிப் புகழ் |
| 9. ஞாயிறு போற்று | பல்வேறு நலன்களைத் தவற விடாதே |
| 10. கெடுப்பது சோர்வு | அர்த்தமற்ற பயத்தை நீக்கு |

**10. சரியாயின் சரியெனவும் பிழையாயின் பிழையெனவும் எழுதுக.**

1. புதிய ஆத்திசூடி பாரதியாரால் பாடப்பட்டது ( )
2. முகமது நபியின் தந்தை ஜேசுநாதர் ( )
3. ஆத்தி மலர் மாலை அணிந்தவர்கள் பாண்டியர்கள் ( )
4. அறம் செய்ய விரும்பு என்புது புதிய ஆத்திசூடியில் இடம்பெறுகின்றது ( )
5. பாற்கடலில் கிடந்தவர் சிவபெருமான் ( )

## அலகு11
## கண்ணகி வழக்குரைத்தல்

1. காட்சி 1இல் இடம்பெறும் பாத்திரங்கள் யாவர்?
    பாண்டிமாதேவி, தோழியர்.

2.காட்சி 1 இடம்பெறும் இடம் யாது?
    பாண்டிமாதேவியின் அந்தப்புரம்

3.கோப்பெருந்தேவியின் முகம் வாட்டமுற்றிருக்க காரணம் யாது?
    அவள் கண்ட தீக்கனா

4.பாண்டிமாதேவி கண்ட தீக்கனா யாது?
    செங்கோலும் வெண்குடையும் நிலத்தில் வீழ்ந்தன, அரண்மனை வாயிலின் ஆராய்ச்சி மணியின் குரல் நடுங்கியது, சூரியனை விழுங்கக் கூடிய இருள் உண்டாயிற்று, இரவில் இந்திரவில் இட்டிருந்தது, பகலில் விண்மீன்கள் விழுந்தன,

5.சிலப்பதிகாரத்தை இயற்றிய புலவர் யார்?
    ……………………………………………

6.சிலப்பதிகாரம் யாருடைய வரலாற்றை கூறுகின்றது?
    …………………………………………………….

7.கோவலன் ஏன் பாண்டி நாட்டிற்குச் சென்றான்?
    ……………………………………………………

7.பாண்டிய நெடுஞ்செழியனின் மனைவியின் பெயர் என்ன?
    ……………………………………………………..

9. எக்காலத்தில் காணும் கனவுகள் பலிக்கும் என கனா நூல் வல்லுநர்கள் கூறுகின்றனர்?

………………………………………………………………

10. கண்ணகி பாண்டிய மன்னனின் அரசவைக்கு எதற்காக வந்தாள்?

………………………………………………………………

11. அரசவைக்கு வந்த கண்ணகியின் தோற்றம் பற்றி வாயிற் காவலன் என்ன கூறினான்?

……………………………………………………………………

12. கோவலனின் தந்தை யார்?

…………………………………………

13. பாண்டிய மன்னனிடம் கண்ணகி தன்னை எவ்வாறு அறிமுகப் படுத்துகின்றாள்?

………………………………………………………………

14. கண்ணகியின் காற் சிலம்பின் உள்ளீடு யாது?

…………………………………………

15. பாண்டிமாதேவியின் காற்சிலம்பின் உள்ளீடு யாது?

……………………………………………

16. கண்ணகி தன் கணவன் குற்றமற்றவன் என்பதை எவ்வாறு நிரூபிக்கின்றாள்?

………………………………………………………

17. கோவலன் ஏன் கொலையுண்டான்?

……………………………………………………………

18. தன் தீர்ப்பு பிழை என்பதை உணர்ந்த பாண்டியனுக்கு என்ன நடந்தது?

……………………………………………………………………

## மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

1. பாண்டிமா தேவியரின் தோழியிர் அமர்ந்திருந்தனர் தோழி என்பதன் ஒத்த கருத்துச் சொல்.

1.பாங்கி 2.உறவினர் 3.சகோதரி 4.தாய்

2. உங்கள் அழகிய முகம் வாடியிருக்கிறது எனக் கூறினர். முகம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்.

1.நுதல் 2.விழி 3.வதனம் 4.நேத்ரம்

3. உடல் நலமின்மையால் முகம் வாடியிருந்தது உடல் என்பதற்குப் பொருத்தமற்ற சொல்

1.மேனி 2.உள்ளம் 3.யாக்கை 4.சரீரம்

4. எனக்கு நோய் ஒன்றுமில்லை என்றாள். நோய் என்பதன் பொருள்.

1.பிணி 2.துன்பம் 3.பசி 4.துயர்

5. அடியாள் மீது அன்பு கூர்ந்து அதனை வெளியிடுங்கள். அன்பு என்பது.

1.பண்பு 2.பாசம் 3.கோபம் 4.மகிழ்ச்சி

6. நான் தீக்கனவு கண்டேன் கனவு என்பதன் ஒத்த கருத்துச்சொல்.

1.நனவு 2.விழிப்பு 3.நினைவு 4.சொப்பனம்

7. தீக்கனவில் உற்பாதம் உண்டு உற்பாதம் என்பது.

1.தீங்கு 2.நன்மை 3.துயரம் 4.மகிழ்ச்சி

8. வாயில் நிற்பவள் கொற்றவை அல்லள். கொற்றவை என்பது.

1.இலக்குமி 2.சரஸ்வதி 3.துர்க்கை 4.மீனாட்சி

9. அவளது கண்கள் கனலைக் கக்குகின்றன. கனல் என்பது.

1.நீர் 2.அப்பு 3.தீ 4.கண்ணீர்

## இடைவெளி நிரப்புக.

| ஆண்பால் | பெண்பால் |
|---|---|
| 1.அரசன் | ………………….. |
| 2…………………. | இறைவி |
| 3.பாங்கன் | …………………… |
| 4…………………… | தேவி |
| 5………………….. | தோழி |
| 6.சுந்தரன் | ………………….. |
| 7…………………… | அடியாள் |
| 8.கணவன் | …………………. |
| 9.அவன் | …………………. |
| 10…………………… | ஒருத்தி |
| 11……………………. | புதல்வி |
| 12.மகன் | ………………….. |

## இணைத்தல் (எதிர்க் கருத்து)

| | |
|---|---|
| 1.கனவு | துன்பம் |
| 2.வாட்டம் | இரவு |
| 3.உண்மை | நனவு |
| 4.இன்பம் | மலர்வு |
| 5.பகல் | பொய் |

## பின்வரும் வாக்கியங்களில் காணப்படும் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை எழுதுக.

1.முகம் வாடியிருக்கிறது

2.கண்ணகிக்கு நீதி தாருங்கள்

3.குழந்தை உணவை உண்டது

4.நான் தீக்கனவு கண்டேன்

5.அவன் எல்லாச் செல்வங்களையும் பெற்றவள்.

| எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

## கண்ணகி வழக்குரைத்தல் (விடைகள்)

5.இளங்கோவடிகள்

6.கோவலன் கண்ணகி வரலாற்றை கூறுகின்றது.

7.கண்ணகியின் காற்சிலம்பை விற்பதற்காக.

8.கோப்பெருந்தேவி

9.கடைச் சாமத்தில் காணும் கனவு

10.தன் கணவன் கோவலனின் இறப்புக்கு நீதி வேண்டிச் சென்றாள்

11.வாயிலில் வந்திருப்பவள் எருமைக் கடாவை வாகனமாகக் கொண்ட கொற்றவை அல்லள். பிடாரியும் அல்லள், பத்திரகாளியும் அல்லள், அவள் கண்கள் கோபக்கனலையும் கக்குகின்றன, கணவனை இழந்தவளாய், கையில் சிலம்பு ஒன்றை ஏந்தியுள்ளாள்.

12.புகார் நகர் பெருங்குடி வணிகன் மாசாத்துவன்.

13.நான் புகார் நகரில் வாழ்கின்றேன், கோவலனின் மனைவி, கோவலனின் ஊழ்வினையால் உமது நகர் வந்து என் சிலம்பொன்றை விற்க விரும்பி உமமால் கொலையுண்டவர், என் பெயர் கண்ணகி

14.மாணிக்கம்

15.முத்து

16.தனது காற்சிலம்பினை தரையில் வீசி உடைத்து தன் சிலம்பிலுள்ளது மாணிக்கங்கள் என நிரூபிக்கின்றாள்

17.பாண்டிமா தேவியின் சிலம்பினைத் திருடி விற்பனை செய்ய வந்திருக்கின்றான் என்ற தவறான முடிவில் அரசனின் கட்டளைப்படி கொலை செய்யப்பட்டான்.

18.அக்கணமே அரியணையிற் சாய்ந்து மரணமடைகினறான். அதைக் கண்ணுற்ற பாண்டிமா தேவியும் அவன் மீது வீழ்ந்து மரணமடைகின்றாள்.

**2.**

| | | |
|---|---|---|
| 1.பாங்கி | 2.வதனம் | 3.உள்ளம் |
| 4.பிணி | 5.பாசம் | 6.சொப்பனம் |
| 7.தீங்கு | 8.துர்க்கை | 9.தீ |

**3.**

| | | |
|---|---|---|
| 1.அரசன் - அரசி | 2.இறைவன் - இறைவி | 3.பாங்கன் - பாங்கி |
| 4.தேவன் - தேவி | 5.தோழன் - தோழி | 6.சுந்தரன் - சுந்தர் |
| 7.அடியான் - அடியாள் | 8.கணவன் - மனைவி | 9.அவன்- அவள் |
| 10.ஒருவன்- ஒருத்தி | 11.புதல்வன் - புதல்வி | 12.மகன் - மகள் |

**4.**

| | | |
|---|---|---|
| 1.கனவு – நனவு | 2.வாட்டம் - மலர்வு | உண்மை - பொய் |
| 4.இன்பம் - துன்பம் | 5.பகல் - இரவு | |

**5.**

| எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|
| 1.முகம் | ------- | வாடியிருக்கிறது |
| 2.கண்ணக் | நீதி | தாருங்கள் |
| 3.குழந்தை | உணவு | உண்டது |
| 4.நான் | தீக்கனவு | கண்டேன் |
| 5.அவன் | செல்வங்களை | பெற்றவன் |

## பந்தி அமைத்தல்

1.பந்தி என்பது ஒரு விடயத்தினை விளக்கிக் கூறுவதாக இருத்தல் வேண்டும். அதாவது ஒருவர் கூறவந்த கருத்தைத் தெளிவாக எடுத்துரைப்பதற்கு பந்தியமைப்பு முக்கியமானது.

**2.பந்தியமைப்பு ஏன் அவசியமாகின்றது**

கருத்துக்களை ஒழுங்குபடுத்துவதற்கு வாசிப்போர்மனதில் கருத்துக்கள் இலகுவாகப் பதியவும் பந்தியமைப்பு அவசியமாகின்றது.

**3.பந்தியொன்றை அமைப்பதற்கான படிமுறைகள்.**

1.குறித்த விடயம் பற்றிய குறிப்புக்களை வாக்கியங்களாக எழுதுதல்
2.வாக்கியங்களை ஒழுங்கு படுத்துதல்
3.ஒழுங்கமைத்த முறைக்கேற்ப வாக்கியங்களை இணைத்தல்
4.வாசகர் மனதில் பதியும்படியான பந்தியை அமைத்தல்

**4.பந்தியின் பண்புகள்**

1.தலைமைப் பொருளைக் கொண்டிருத்தல்
2.துணைக் கருத்துக்களைக் கொண்டிருத்தல்
3.கருத்துத் தொடர்பைக் கொண்டிருத்தல்

**5.பந்தி ஒன்றில் தவிர்க்கப்பட வேண்டியவை**

1.கூறியது கூறல்
2.மிகைபடக் கூறல்
3.முன்னுக்குப் பின் முரணாகக் கூறல்
4.சொல்ல வந்த பொருளைத் தவிர்த்து வேறு பொருளைக் கூறல்

### பின்வரும் வாக்கியங்களை ஒழுங்கு படுத்திப் பந்தி அமைக்குக.

அ. பேச்சு ஒளி நிலையில் சென்றடைகின்றது
ஆ. இச் செய்திப் பரிமாற்றம் மொழியின் பேச்சு, எழுத்து என இரு நிலைகளில் அடம்பெறுகின்றது.
இ. மனிதன் தன் எண்ணங்களை பிறரோடு பகிர்ந்து கொள்ள பயன்படும் அரிய கருவி மொழி ஆகும்.
ஈ. எழுத்து வரி வடிவில் தன் செயலை ஈடேற்றுகின்றது.
உ. இது செய்திப் பரி மாற்றத்துக்கான தொடர்பை ஏற்படுத்தும் கருவியாகவும் அமைகின்து.

### பின்வரும் தொனிப் பொருளில் பந்தி எழுதுக.

1.சூழல்
2.பத்திரிகை
3.நீர்வளம்
4.மரம் வளர்ப்போம்
5.வாசிப்பின் சிறப்பு

## அலகு 12
## (செய்தித் தாள்)

1. தொடர் பாடல் ஊடகங்கள் எவை?
   வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள், இணையம்
2. செய்தி என்பதற்கான ஆங்கிலச் சொல் எது?
   NEWS
3. News பேப்பர் என்ற காரணப் பெயர் வந்ததற்கான விளக்கம் யாது?
   N – North
   E – East
   W – West
   S – south

என உலகின் நான்கு திசைகளிலும் இருந்து வரும் செய்திகளைத் தருவதால்

4. உலகின் முதல் செய்தித் தாள் எங்கு எப்போது தோன்றியது?
   இத்தாலியில், கி.பி 16ஆம் நூற்றாண்டில்
5. அச்சியந்திரத்தை கண்டுபிடித்தவர் யார்? எந்த நாட்டை சேர்ந்தவர்?
   ஜான் கூட்டன்பர்க், ஜேர்மனி

6. செய்தித்தாளில் வெளிவரும் விடயங்கள் எவை?
   அறிவியல், இலக்கியம், கலைகள், ஆன்மீகம், விளையாட்டு...... முதலியவை
7. செய்தித்தாளின் பயன்கள் நான்கு தருக.
   1.செய்திகளை உடனுக்குடன் அறிதல்
   2.படிப்பவரின் அறிவு வளரும்
   3.அரச தகவல்கள், அறிவிப்புக்களை அறியலாம்
   4.மொழி வளர்ச்சி ஏற்படும்
   5.பயனுள்ள பொழுது போக்கு
8. செய்தித்தாளின் பணிகள் நான்கு தருக.
   1.உண்மையான செய்திகளை வெளியிடல்
   2.நடுநிலையுடன் செயற்படல்
   3.நாட்டின் முன்னேற்றத்துக்கு உறுதுணையாக இருத்தல்
9. செய்தித்தாள் எனும் கட்டுரையை எழுதியவர் யார்?
   எஸ்.ஆர்.கோவிந்தசாமி
10. எமது பிதேசத்தில் வெளிவரும் செய்ததத்தாள்கள் ஐந்து தருக.
   உதயன், வலம்புரி, தினக்குரல், ஈழநாடு, காலைக்கதிர்

## இடைவெளி நிரப்புக.

1.இங்கிலாந்தில் இருந்து வெளியான பொது அறிவுச் செய்தி இதழ் ...............................ஆகும். இது...........................ஆம் ஆண்டு வெளிவந்தது.

2.செய்தித்தாள்கள் சமயக் கருத்துக்களைக்கூறி இறை....................... வளர்த்து வருகின்றன.

3.இந்தியாவின் ..................................இல் செய்தி இதழ்கள் வெளி வந்தன.
(பக்தி, பப்ளிக் இன்டேலியன்ஸ், 1835, 1633)

## கலைச் சொற்கள்

1.Fax – தொலைநகல்
2.CD - இறுவட்டு
3.Key Board – விசைப் பலகை
4.Monitor – திரை
5.Internet - இணையம்
6.E Mail – மின்னஞ்சல்
7.Software – மென் பொருள்
8.Wepsite – வலைத்தளம்
9.User Name – பயனர் பெயர்
10.Pass Word – கடவுச் சொல்
11.Mouse – சுட்டி
12.Digital – எண்மானம்
13.Hard Ware – வன்பொருள்
14.Pen Drive – பேனா செலுத்தி
15.O.H.P – மேந் தலை எறியி

## அலகு 13

## திருக்குறள் - செய்ந்நன்றி அறிதல்

1.திருக்குறளை இயற்றியவர் யார்?
2.திருவள்ளுவரின் வேறு பெயர்கள் மூன்று தருக.
3.திருக்குறள் எத்தனை அதிகாரங்களைக் கொண்டது?
4.ஒரு அதிகாரத்தில் எத்தனை குறட்பாக்கள் உள்ளன?
5.திருக்குறளில் எத்தனை குறட்பாக்கள் உள்ளன?
6.திருக்குறளின் முதலாவது அதிகாரம் என்ன?
7.திருக்குறளின் வேறு பெயர்கள் எவை?
8.திருக்குறளில் செய்ந்நன்றி அறிதல் எத்தனையாம் அதிகாரமாக உள்ளது?

9.செய்ந்நன்றி அறிதல் என்றால் என்ன?
10.செய்ந்நன்றியின் உயர்வு எவ்வாறு கூறப்படுகின்றது?
11.செய்ந்நன்றி மறப்பதால் ஏற்படும் தீங்கு யாது?
12.செய்ந்நன்றி அறிதல் எவ் அதிகாரத்தின் பின்னர் வைக்கப்பட்டது?
13.செய்யாமல் செய்த உதவி பற்றி வள்ளுவர் என்ன கூறுகின்றார்?
14.எதனை மறக்க வேண்டும் எதனை மறக்கக் கூடாது என வள்ளுவர் கூறுகின்றார்?
15.செய்ந்நன்றி மறந்தவரின் நிலை யாது?
16.இவ் அதிகாரத்தில் உதவி பற்றிக் கூறியுள்ளவற்றைத் தருக.

## இடைவெளி நிரப்புக.

1.செய்யாமல் செய்த உதவிக்கு …………………
வானகமும் ஆற்றல் அரிது
2.காலத்தினால் செய்த நன்றி சிறிதுஎனினும்
……………… மாணப் பெரிது.
3………………………….. செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை ………………………….. பெரிது
4.தினைத்துணை …………………………. செயினும் ……………துணையாக்
கொள்வர் ………………………….
5………………………….. வரைத்தன்று ……………. உதவி ……………..
செயப்பட்டார் …………….. வரைத்து
6.மறவற்க ………………………….. கேண்மை ………………………..
துன்பத்துள் துப்பு ஆயார் நட்பு
7……………………… எழுபிறப்பும் …………………… தம்கண்
……………………… துடைத்தவர் ……………………….
8……………………. மறப்பது நன்றன்று …………………… அல்லது
அன்றே ……………….. நன்று.
9.கொன்று அன்ன இன்னா செயினும் அவர்…………………
……………………… நன்று ……………………
10.எந்நன்றி …………………. உய்வுண்டாம் உய்வு இல்லை
…………………………………. கொன்ற மகற்கு

## 3.மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

1.செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்…. இங்கு வையகமும் என்பது
1.வானம் 2.உலகம் 3.காடு 4.கடல்
2.மறவற்க மாசற்றார் கேண்மை……… கேண்மை என்பது
1.நட்பு 2.பகை 3.உறவு 4.எதிரி
3.விழுமம் துடைத்தவர் நட்பு… வழுமம் என்பது
1.இன்பம் 2.கடினம் 3.தன்பம் 4.வறுமை
4.மாசற்றார் கேண்மை……… மாசு என்பது
1.நன்மை 2.காசு 3.நல்லவர் 4.குற்றம்
5.வையகமும் வானகமும் ஆற்றல் அரிது ….. வானகம் என்பது
1.விண்ணுலகம் 2.மண்ணுலகம் 3.பூவுலகம் 4.பாதாளவுலகு
6.காலத்தினால் செய்த நன்றி……….. காலம் என்பதன் எதிர்க் கருத்து
1.அகாலம் 2.அபகாலம் 3.அபசாரம் 4.நிர்க்காலம்
7.விழுமம் துடைத்தவர் நட்பு ……… நட்பு என்பதன் எதிர்க் கருத்து
1.அன்பு 2.பாசம் 3.உறவு 4.பகை
8.நன்மை கடலின் பெரிது . நன்மை என்பதன் எதிர்ப் பதம்
1.நன்று 2.தீமை 3.சிறப்பு 4.மேன்மை
9.துன்பத்துள் துப்பு ஆயார் நட்பு …… துன்பம் என்பதன் எதிர்க் கருத்துச் சொல்
1.துயரம் 2.வருத்தம் 3.இன்பம் 4.கனிவு

**பின்வரும் சொற்களை வைத்து பொருத்தமான வாக்கியம் எழுதுக.**

1.தினை
2.திணை
3.என்
4.எண்
5.அரி
6.அறி
7.அரை
8.அறை
9.வலி
10.வழி
11.வளி

## 5. உரிய நிறுத்தக் குறியீடுகளை இடுக.

தேவியரே மன்னிக்க வேண்டும் உங்கள் முகம் பொலிவு இழந்திருக்க காரணம் யாது எனக்கு விடிகாலையில் தீக்கனவுகள் வந்தன இரவில் இந்திரவில் இட்டிருந்தது பகலில் விண்மீன்கள் விழுந்தன சூரியனை விழுங்கக் கூடிய இருள் உண்டாயிற்று இறை அருள் பெற்றவர்களுக்கு நாள் கோள் வினைப்பயன் வலிதற்றுப் போகும் என்றாள்.

## 6. பின்வரும் வாக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு கீழ் உள்ள அட்டவணையை நிரப்புக.

1.பாங்கி கூறினாள்
2.கோவலன் ஊழ்வினையால் கொலையுண்டான்
3.அரசன் அரியணையில் சாய்கிறான்
4.வாயிற் காவலர்கள் வருகின்றனர்
5.நாம் அரச சபைக்குப் போவோம்

| இல | துணை | பால் | எண் | இடம் | காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |
| 4 | | | | | |
| 5 | | | | | |

## செய்ந்நன்றி அறிதல் (விடைகள்)

**01.**

1. திருவள்ளுவர்
2. தெய்வப்புலவர், முதற்பாவலர், செந்நாப் போதர், பெருநாவலர், பொய்யா மொழியார்.
3. 133
4. பத்துக் குறட்பாக்கள் உள்ளன
5. 1330
6. கடவுள் வாழ்த்து
7. முப்பானூல் உத்தர வேதம், தெய்வநூல், பொதுமறை, வாயுறை வாழ்த்து, தமிழ்மறை.
8. ஏழாம் அதிகாரம்
9. தனக்குப் பிறர் செய்த நன்றியை மறவாது இருத்தல்
10. அ.பிரதி பலனை எதிர்பாராது செய்தல்,
    ஆ.தேவையான காலத்தில் செய்தல்
    இ.காரணம் கருதாது செய்தல்

11. எவ்வகைத் தருமங்களை அழித்தவர்களும் தப்ப வழியண்டு ஆனால் செய்ந்நன்றி மறந்தவர்கள் கடைத்தேற வழியில்லை.
12. இனியவை கூறல்
13. அவ்வாறான உதவிகளுக்கு ஈடாக மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் கொடுத்தாலும் போதாது.
14. ஒருவர் ஒருவருக்கு செய்த தீமையை உடனே மறக்க வேண்டும் அவர் செய்த உதவியை மறக்கக் கூடாது
15. செய்ந்நன்றி மறந்தவர் எக்காலத்திலும் கடைத்தேற வழியில்லை.
16. அ. பிறருக்கு ஓர் உதவியும் செய்யாதிருக்க தக்க சமயத்தில் ஒருவர் தமக்குச் செய்த உதவிக்கு மண்ணுலகும் விண்ணுலகும் ஈடாகாது.
    ஆ. ஒருவருக்கு உதவி வேண்டிய காலத்தில் தப்பாமல் செய்த உதவி மிகச் சிறிதாக இருந்தாலும் அவ்வுதவி உலகை விடப் பெரியது.
    இ. பயனை எதிர்பாராமல் செய்த உதவியின் நன்மை கடலைவிடப் பெரியது.
    ஈ. ஒருவன் தினை அளவு உதவி செய்தாலும் அதனைப் பனையளவாகக் கொள்வர் பெரியர்.
    உ. உதவிக்கு அளவில்லை அது பெற்றுக் கொண்டவரின் தகுதியின் அளவை உடையதாகும்
    ஊ. குற்றமற்ற நற்குணமுடையார் நட்பை மறக்கக் கூடாது துன்ப காலத்தில் உதவிய நட்பை விடலாகாது.
    எ. ஒருவர் செய்த உதவியை மறப்பது நல்லதல்ல
    ஏ. செய்ந்நன்றி மறந்தவர்கள் ஈடேற வழியேயில்லை.

## 5. உரிய நிறுத்தக் குறியீடுகளை இடுக. (விடை)

தேவியரே, மன்னிக்க வேண்டும். உங்கள் முகம் பொலிவு இழந்திருக்க காரணம் யாது? எனக்கு விடிகாலையில் தீக்கனவுகள் வந்தன. இரவில் இந்திரவில் இட்டிருந்தது. பகலில் விண்மீன்கள் விழுந்தன. சூரியனை விழுங்கக் கூடிய இருள் உண்டாயிற்று. ''இறை அருள் பெற்றவர்களுக்கு நாள் கோள் வினைப்பயன் வலிதற்றுப் போகும்'' என்றாள்.

| இல | திணை | பால் | எண் | இடம் | காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | உயர் | பெண் | ஒருமை | படர்க்கை | இறந்தகாலம் |
| 2 | உயர் | ஆண் | ஒருமை | படர்க்கை | இறந்தகாலம் |
| 3 | உயர் | ஆண் | ஒருன் | படர்க்கை | நிகழகாலம் |
| 4 | உயர் | பலர் | பன்மை | படர்க்கை | நிகழகாலம் |
| 5 | உயர் | பலர் | பன்மை | தன்மை | எதிர்காலம் |